[27th November 1970

உலோகப் பொருள்கள் கலந்த மணல்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல், மணவாளக்குரிச்சி கடற்கரையிலிருந்து உலோகப் பொருள்கள் கலந்த மணல் அயல் நாட்டிற்கு கடந்த 5 வருடங்களாக எவ்வளவு ஏற்றுமதியாகி இருக்கிறது ?

(இ) இந்த ஏற்றுமதியால் வருடத்திற்குக் கிடைக்கும் வெளி நாட்டு நாணயச் செலாவணி எவ்வளவு ?

(உ) ஏற்றுமதியாகும் மணலில் கலந்துள்ள உலோகங்களின் அளவு என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ), (இ) மற்றும் (உ) : அவைமுன் ஓர் அறிக்கை† வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மணவாளக்குரிச்சி, குளச்சல் போன்ற பகுதிகளிலிருந்து ஆண்டொன்றுக்கு 40,000 டன் உலோகப் பொருள் ஏற்றுமதியாகிறதென்றும், ரூபாய் 32 லட்சத்திற்கு மேல் இதன்மூலம் அந்நிய நாணயச் செலாவணியாக நமது இந்திய அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது என்றும் இங்கே கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலிருந்து தெரிகிறது. எனவே அந்தப் பகுதியிலேயே இந்த உலோகப் பொருள்களைப் பயன்படுத்தி ஏதாவது ஒரு தொழிற்சாலையை அமைக்கும் வகையில் அரசாங்கத்திடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இதுபற்றிய கேள்வி வந்த உடனேயே எனக்கும் இந்தச் சந்தேகம் வந்தது. எனவே இது பற்றி மத்திய சர்க்காரிடம் உடனடியாகத் தொடர்பு கொண்டிருக்கிறோம். 'அடாமிக் எனர்ஜி கமிஷன்' மூலமாக இந்தப் பொருள்களை வெளியே ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக அந்தப் பகுதியிலேயே ஏதாவது ஒரு தொழிற்சாலைக்குப் பயன்படுத்தலாமா என்று ஆராயும்படி நம் அரசின் சார்பில் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

Taxis

*7. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that taxis are not available at the queing place at the Central Station, Madras, during peak hours ; and

(*b*) whetherit is a fact that self-appointed intermediaries are charging the passengers after procuring taxis from nearby spots ?

† Printed as Appendix I

27th November 1970]

வாடகைக் கார்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை சென்ட்ரல் புகை வண்டி நிலையத்தில் வாடகைக் கார்களுக்காக 'க்யூ' வரிசை நிற்குமிடத்தில், நெரிசல் நேரங்களின் போது வாடகைக் கார்கள் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(இ) அண்மையில் உள்ள இடங்களிலிருந்து வாடகைக் கார்களைக் கொண்டு வந்த பிறகு பயணிகளிடமிருந்து இடையாட்கள் கட்டணங் கள் வசூலிக்கிருர்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : (அ) சென்ட்ரல் ரயில் நிலையத்தின் வாடகைக் கார்கள் நிறுத்துமிடத்தில் நெரிசல் நேரங்களில் நிறுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட அளவு வரையில் வாடகைக் கார்கள் கிடைக்கின்றன. மக்கள் நெரிசல் காரணமாக வாடகைக்கார்கள் உடனடியாகக் கிடைப்பது சற்று கடினமாக உள்ளது.

(இ) சென்ட்ரல் ரயில் நிலையத்தின் வாடகைக் கார் நிற்குமிடத் திற்கு வெளியிலிருந்து சில சிறுவர்கள் வாடகைக் கார்களைக் கொண்டு வருகின்றனர் என்றும், தாங்கள் செல்ல வேண்டிய இடத்தை விரைவில் அடைய வேண்டும் என்ற அவாவிலுள்ள பயணிகள் அவர்களை நெருங் கும்போது தரகு வசூலிக்கின்றனர் என்றும் தெரியவருகிறது. இத் தகைய இடையாள்கள் சென்ட்ரல் ரயில்வே நிலையத்தின் வாடகைக் கார்கள் நிறுத்துமிடத்திற்கு வெளியிலிருந்து வாடகைக் கார்களைக் கொண்டுவரும் பழக்கத்தைத் தடைசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நான் சென்னைக்குப் புகைவண்டி மூலமாக வந்தேன். ஒரு டாக்சி பிடித்து அதில் ஏறிக்கொண்டு வரும்போது, கொஞ்ச தூரம் சென்றதும் ஒரு சட்டமன்ற உறுப்பினர் வந்தார். டாக்சி டிரைவர் அவரையும் என்னுடன் ஏற்றிக்கொண்டார். அதற்குமேல் ஏர் இந்திய கார்பொ ரேஷனுக்குச் செல்கிற ஒருவர் வந்தார். அவரையும் ஏற்றிக்கொண் டார். ஒருவரைத் தவிர மற்றவர்களை ஏற்றக் கூடாது என்று நான் சொல்லியும் கேட்காமல் மூன்று பேரையும் ஏற்றிக்கொண்டார். என்னை யும் மற்றொரு சட்டமன்ற உறுப்பினரையும் கொண்டுவந்து விடுதியில் இறக்கிவிட்டு விட்டு மற்றொருவருடன் அவரைக் கொண்டுபோய் விடச் சென்றுவிட்டார். பிறகுதான் இதுபோல அடிக்கடி புகைவண்டி நிலையங்களில் நடப்பதாக நண்பர்கள் சொன்னார்கள். நானும் அதைக் கண்கூடாகப் பார்த்தேன். இதைத் தவிர்ப்பதற்கு வழி வகை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : அதைத் தடுக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அப் போதே புகார் செய்திருப்பார்களானல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல,

[27th November 1970

In the case of complaints received from the passengers at railway stations regarding difficulty in getting taxis or any other complaints, they are attended to immediately by the traffic Police Constable on duty.

நல்ல வேளையாக கூடவே ஒரு சட்டமன்ற உறுப்பினரையும் சேர்த்திருக்கிறார்.

THIRU G. VASANTHA PAI : Sir, is the Hon. Minister aware that the same difficulty is experienced by the passengers in the Madras Airport also ? There is a regular racket which prevents the passengers from getting the taxis for reaching the town.

THE HON. THIRU S.J. SADIQ PASHA : I am not aware of any racket. If my hon. Friend gives specific instances, serious action will be taken.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, ரயில்வே ஸ்டேஷனில் வந்திறங்கியதும் சர்க்கார் எஸ்டேட்டில் உள்ள எம்.எல்.ஏக்கள் தங்கும் விடுதிக்குப் போக வேண்டுமென்று சொன்னாலேயே எந்த டாக்சிக் காரரும் ஏற்றிக்கொள்வதில்லை. ஏனென்றால் அதற்கு 80 காசு அல்லது 90 காசு, மேலும் போனால் ஒரு ரூபாய்தான் சார்ஜ் கிடைக்கும். திருவல்லிக்கேணிக்குப் போக வேண்டுமென்றால் கூட, ஏற்றிக் கொள்வதில்லை. மைலாப்பூர், அடையாறு என்று சொன்னால் ஏற்றிக்கொள்கிறார்கள். அதைக் கண்டிப்பாகத் தடுத்து நிறுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். எந்த இடத்திற்கு வேண்டுமானாலும் கொண்டு போய்விடுவதற்கு அவர்கள் தயாராக இருக்கும்படி செய்ய வேண்டும். நானே பலமுறை ரயில்வே ஸ்டேஷனில் இதற்காகக் காத்துக் கொண்டிருந்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இது முக்கியமான பிரச்னைதான். சட்டமன்றம் கூடுகிற நேரத்திலும், முடிந்து எல்லோரும் திரும்புகிற நேரத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களின் சௌகரியத்திற்காக சர்க்கார் பஸ்களை விடலாமா என்ற யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

THIRU M. RAJAH IYER : I wanted to suggest that the old system of plying buses from railway stations for the benefit of the Legislators could be revived. Just like my hon. Friend Thiru G. Swaminathan, I also experienced the same difficulty. When I said that I wanted to go to the Legislators' Hostel, the taxi driver wouldn't even look at me. My suggestion is that on the day or on the two days preceding the day of comemncement of a Session, a Special Legislators' Bus may be run between Egmore Station and the Legislators' Hostel and between Central Station and the Legislators' Hostel, as was being done in the past.

DEPUTY CHAIRMAN : It should be in the form of a question.

THIRU M. RAJAH IYER : May I know if the old practice will be revived ?

27th November 1970]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : நான் ஏற்கனவே சொல்லியதைப்போல, சட்ட மன்றம் நடைபெறும் நாட்களில் எக்மோர், சென்டிரல் ஸ்டேஷன்களுக்குத் தனியாக பஸ் விடலாமா என்ற யோசனை அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது. குறைந்த தூரம் வருவதால் வருமானம் குறைந்துவிடுகிறது என்பதற்காக டாக்சிக்காரர்கள் அப்படி வரத் தயங்கியிருக்கலாம். அப்படியிருந்தால், அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : இந்த சமயத்தில் இன்னொரு வினவையும் கேட்க விரும்புகிறேன். பல டாக்சிகளில் மீட்டர்கள் சரியாகக் காட்டுவதில்லை. விடுதியிலிருந்து சட்ட மன்றத்துக்கு வருவதற்கு ஒரு ரூபாய் ஆகும், அது நல்ல சரியான மீட்டராக இருந்தால். ஆனால் சில சமயங்களில் ரூ. 1.35 என்றும், ரூ. 1.60 என்றும் கூட சில மீட்டர்கள் காட்டுகின்றன. இப்படி மீட்டருக்கு மீட்டர் மாறுபாடாக இருக்கின்றது. இவற்றைத் தடுக்க எப்போதாவது ரோடுகளில் டாக்சி ஓடும் போது, அதை நிறுத்தி மீட்டர்களைச் சரிபார்க்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : இப்போதே அது செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே இவற்றின்பேரில் எல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்தில் வருகிற இன்னொரு கேள்வியில் அதுபற்றிச் சொல்லப்படுகிறது. இதுபோன்ற தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு, கோர்ட்டில் தண்டனை, அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் தவறுகள் நடப்பதாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU G. VASANTHA PAI : Sir, with reference to the Hon. Minister's suggestion that if specific instances are brought to his notice, action will be taken, I want to bring to his notice that in the Madras Airport, all the taxis are put outside in front of the bus stop with the result that there are intermediaries who ask the passenger " Where do you want to go ?", and if he said " Adyar or other nearby places" they do not bring the taxise, and persons especially who come by the night planes from Hyderabad are very much inconvenienced. Sometimes one or two such passengers telephoned to me and I had to become a taxi driver and take them to their destination.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The suggestion is noted.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, டாக்சியில் பிரயாணம் செய்யும்போது, அதில் உள்ள மீட்டரில் எவ்வளவு சார்ஜ் ஆகிறதோ, அத்துடன் இரண்டு ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சில டாக்சிக்காரர்கள் உத்தரவு போடுகிறார்களே, அதுபற்றி அரசிற்குத் தெரியுமா ? அப்படிப்பட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா : மாண்புமிகு உறுப்பினர் அப்படி யாருக்காவது கொடுத்தாரா என்பதைச் சொல்ல வேண்டும்.